# கவிதை என்றான என்

# கிறுக்கல்கள்



கே. என. பாத்திமா நப்லா

poem 201

# கவிதை என்றான என்

# கிறுக்கல்கள்

# கவிதை என்றான என்

# கிறுக்கல்கள்

கே. என. பாத்திமா நப்லா

வெளியீடு

கலாசார அலுவல்கள் திணைக்களம்
8வது மாடி,
செத்திரிபாய,
பத்தரமுல்ல

கவிதை என்றான என்
(சிறுக்கல்கள்)
கே. என. பாத்திமா நப்லா
முதற் பதிப்பு: டிசம்பர் 2013
ISBN: 978-955-0353-33-0
வெளியீடு:
கலாசார அலுவல்கள் திணைக்களம்
அச்சகம்: தயாவங்ஸ பிரின்டர்ஸ்
இல. 446, மரதான வீதி. கொழும்பு-10

2013- திறந்த கையெழுத்துப் பிரதியாக்கப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட வெற்றிப் படைப்பு இது. இதன் உள்ளடக்கம் ஆசிரியரின் கருத்தேயன்றி, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கருத்துக்கள் அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

# படைப்பிலக்கியத்தில் ஈடுபடுவது வாழ்வின் பேரின்பம்.

நாவல், சிறுகதை, கவிதை என்பன இலக்கியப் பெறுமானத்தை உச்ச நிலைக்குக் கொண்டு செல்கின்ற மூன்று விடயங்களாகும். இலக்கியப் படைப்பென்ற வகையில் இம்மூன்றும் இலக்கியத்தை ஒரு பாடமாகப் பயில்கின்ற மாணவர் மத்தியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சமூக மயமாக்கப்பட்டுள்ள மக்கள் இலக்கியமான இம்மூன்று வகைகளும் தனிப்பட்ட அபிமானத்திற்கும், இரசிகத் தன்மைக்கும் ஏற்ப உபயோகத்துக்குள்ளா கின்றன. சமூக அனுபவங்கள் ஒன்றையோ பலவற்றையோ நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர் என்போர் வாசகர் முன் வைக்கின்றவர்களாவர்.

சில சந்தர்ப்பங்களில் ஓர் இலக்கியவாதி இம்மூன்று துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பர். இத்தகைய இலக்கியச் சூழலில் நாவல், சிறுகதை, கவிதை படைப்பாக்கத்தில் ஈடுபடுவோரை ஊக்குவிப்பதோடு, அவற்றை மக்கள் மயப்படுத்தும் நோக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திறந்த கையெழுத்துப் பிரதிப் போட்டி நடாத்தி, வெற்றிப் படைப்புக்களை அச்சிட்டு வெளியிடும் செயற்திட்டத்தின் ஓர் அறுவடையே **கவிதை எனதான என் கிறுக்கல்கள்** என்ற இந்த கவிதைத் தொகுப்பு நூல்.

அகில இலங்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கிடைக்கப்பெற்ற பிரதிகள், பிரபல இலக்கியவாதிகளைக் கொண்ட குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட வெற்றிப் படைப்பான இந்த சிறுகதைத் தொகுப்பு **கே. என். பாத்திமா நப்லா** அவர்களின் படைப்பாற்றலை பிரபல்யப்படுத்துகிறது. நூலாசிரியரின் உயர்ந்த வெற்றிப் படைப்பாற்றலை நான் இதயபூர்வமாக

மேலும் இந்த இலக்கியவாதிகளை ஊக்கமூட்டி, ஆற்றலை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்குவதற்கு வழிகாட்டிய கலாசார, கலை அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு ரீ.பீ. ஏகநாயக அவர்களையும், கலாசார கலை அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. வஸந்த ஏகநாயக அவர்களையும், செயற்குழுவினரையும் நன்றியுடன் ஞாபகமூட்டுகிறேன்.

இலக்கியத்துறையை வளப்படுத்தும் நோக்கில் ஆக்கத்துறையில் ஈடுபடும் இந்த இலக்கியவாதிகள் மென்மேலும் தைரியமும் வெற்றியும் பெறப் பிரார்த்திக்கிறேன்.

கலாசார அலுவல்கள் திணைக்களம்
8வது மாடி, செத்திரிபாய,
பத்தரமுல்ல.
திணைக்களம்
2013.12.20

விஜித் கனுகல
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள்.

# கவிதை என்றான என்

# கிறுக்கல்கள்

## கிறுக்கல் வகை - 01

01. *இறைவன் ஒருவன்*
02. *நரகத்தின் அழைப்பிதழுடன் சைத்தானின் ஊர்வலம்*
03. *வெள்ளைத் துனியும் ஆறடி நிலமும்*
04. நரக விடுதலை
05. *ஒரு சிறு பகற் பொழுது*
06. *புரட்டப்படும் நாள்*
07. *கொண்டு செல்வதை மட்டும்*

## இறைவன் ஒருவன்!

இல்லை இறைவன் என்று
பேசும் மனிதா கேளடா.....
இறைவன் என்ற சொல்லில்
உள்ள அர்த்தம் பாரடா......
உன் உயிரும் உடலும் உணர்வும் உலகம்
உண்மை உதயம் தான் - அதை
இயக்கும் சக்தி ஒருவன் இறைவன்
உண்மை அல்லவோ......

வீசும் காறறு சுவாசமாக வருவதெப்படி......?
நாற்றுக் கொண்டு மரங்களனைத்தும் முளைப்பதெப்படி
உணர்ச்சி தன்னை ஐந்தும் ஆறும் புரிவதெப்படி......?
அணுவின் உயிரில் உலக சக்தி திகழ்வதெப்படி......?

இதற்குப் பின்னால் உலவும் சக்தி மகிமையல்லவோ...?
அதை இயக்கும் சக்தி ஒருவன் இறைவன்
உண்மையல்லவோ.....

தூண்கள் இன்றி உயர்ந்து நிற்கும் வானமெப்படி......?
அற்புதங்கள் அனைத்தும் சொல்லும் வேதமெப்படி......?
நுண்ணறிவு தன்னை உலகில் கொண்ட தூதர் எப்படி...?
இதற்கும் மேலால் அனைத்தும் தாங்கும் உலகமெப்படி....?

இதற்குப் பின்னால் உலவும் சக்தி மகிமையல்லவோ...?
அதை இயக்கும் சக்தி ஒருவன் இறைவன்
உண்மையல்லவோ....

கல்லும் மண்ணும் கடலும்
இங்கே இறைவன் இல்லையே.......!
அதையும் இயக்கும் உண்மை சக்தி
இறைவன் ஒருவனே - இந்த
புரிதல் கொண்ட மனித வாழ்வில்
நிகழும் வெற்றியே............!

# நரகத்தின் அழைப்பிதழுடன் சைத்தானின் ஊர்வலம்

சைத்தான் தின்று
சப்பித்துப்பிய வீடுகளைத்தான்
அனேக இடங்களில் காணக்கிடைக்கிறது......

பாங்கொலிக்கும் நேரங்களில்
அந்த வீடுகளின் பக்கத்தில் நின்றால்
தொலைக்காட்சி நாற்றம் தான்
புலன்களை அடைத்துக் கொள்கிறது....

பள்ளி வாயல்
தொழுகை நேரங்களில்
இல்லாமல் போனவர்கள்
மறைந்திருக்கும் குகைகளாக
மாறிப் போன அந்த வீடுகளில்
சைத்தானின் எச்சில் வழிகிறது......

விளை நிலங்களின்
உரிமையாளர்களெல்லாம்
கண்மூடிக்கிடக்க
விளைச்சல்களை சைத்தான்
விழுங்கிக் கொண்ட
வரலாறுகள் தான்
அந்த வீடுகளில் எழுதப்பட்டவை......

நடுநிசி நேரம் வரை
பேச்சுக்களை வாந்தியெடுக்க
கண்கள் விழித்திருப்பதால்
வைகறைத் தொழுகையின்
பயன்கள் பெறாமலே
அந்த வீடுகளின் தூக்கம் கலைகிறது....

ஓதலின் ஓசை
முடக்கப்பட்டுக் கிடக்கும்
இரவுகளில்
இசையின் விசையால்
வாய் கொப்பளிக்கும் சைத்தான்
வெற்றிக் களிப்பில் சிரித்துக் கொள்ள
சப்பித்துப்பிக் கொண்டிருக்கும்
வீடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க
நாற்றம் பரவிப்பரவி
எங்கும் அசுத்தம்......

## வெள்ளைத் துணியும் ஆறடி நிலமும்!

தூங்கும் போது
தலையணைக் கடியிலும்
அமரும் போது
நாட்காழியாகவும்
நடக்கும் போது
கைகளுக் குள்ளாகவும்
மரணம்
எனக்காக காத்திருப்பதாய் உணருகிறேன்....

உடல் மெல்ல நீட்சியடைவதாயும்
உயிரின் கனம் குறைவதாயும்
காற்றின் வாசம் தொலைவதாயும்
கனவுகள் கண்டு விழித்துக் கொள்கிறேன்

உயிரற்ற உடலின் முன் உறவுகளின் ஓலத்தையும்
மரணச் செய்தி ஒலிக்கும் ஒலிபெருக்கியின் சத்தத்தையும்
சகிக்க முடியாமல் கிடக்கையில்
குளிப்பாட்டுவதும் கபனிடுவதும்
எனக்காக தொழுவதுமாய் செல்லும்
மரண ஊர்வலத்தில் நானும் பயணிக்கிறேன்.......

கபுறுக்குழிக்குள் புதைக்கு முன்
பார்க்க நினைத்தாலும்
விழிக்க முடியாத உறக்கத்தில்
எனைச் சுமந்து வந்த - அவர்களின்
நிழல் மட்டும் என் மீது......
தேடிப்பார்த்தால்
என்னையும் காணவில்லை...
மரணம் வென்று விட்டது
என் வெற்றிக்காக
என் புகழும்
என் பணமும்
என் உறவு கொண்டு அலைந்த
எவரும் உதவிடவில்லை
மரணம் வென்று விட்டது......

# நரக விடுதலை

யுத்தம் நடந்தது
உயிர்கள் பறிபோனது
என்கிறார்கள்......
பேரலை சீறியது
எல்லாம் அழிந்து
என்கிறார்கள்.......
விபத்து நடந்தது
உணர்வுகள் இழந்தன
என்கிறார்கள்.........
குறைபட்டுக் குழந்தை பிறக்கிறது
பரிதவிப்பு தொடர்கிறது
என்கிறார்கள்.........

அழிவுகள் ஏதும் எனக்கில்லை
கனவுகள் காண்கிறேன் உயர்வுக்காக.......
கேட்காமலே கிடைக்கிறது அனைத்தும்
நன்றியாக இருக்கிறேனா....
உறுத்தல்.........

இறைவா....
மன்னித்து விடு
உன் அருளைக் கேட்கிறேன் இன்னும்
பாவம் குவிகிறது
அள்ளிச் சுமந்திட நான் மட்டும் போதவில்லை
படைப்புக்கு நன்றி சொல்ல
என் வாழ்நாளும் போதவில்லை....

இறைவா -
மன்னித்து விடு
பிடிக்காமல் விட்ட நோன்புகள் என் கண் முன்னால் உறுத்த
விட்டு விட்டுத் தொழுகையில் மனது அழுகிறது....
கிடைக்கும் நாளெல்லாம் விளையாட்டாய் கழிகையில்
ஆயுள் கைதியாகிறேன் - என்னிடம் நானே.......!

நாட்களின் வேகமும்
உலகத்தின் நடைமுறையும்
உணர்த்துகிறது
முடிவுகாலம் நெருங்கி விட்டதென்று.....
புரிந்தும்
புரியாமல் கழியும் நாட்களை என்னவென்பது........?

# ஒரு சிறு பகற்பொழுது

சந்தித்துக் கொள்வோம்
அப்போது தான் அறிமுகமாகிக் கொள்வோம்

யார் என்னை எழுப்பியது......
சிறு தூக்கம் ஒன்றிலிருந்த போது
யார்தான் என்னை எழுப்பியது
என்று
எல்லோரும் கேட்டுக் கொள்வோம்......
வாழ்ந்து முடித்தாயிற்று
இது முடிவு நாள் என்று
எங்கிருந்தோ ஒரு குரல் ஒலிக்கையிலே
எப்படி இந்த ஆச்சரியம் நிகழும்.......
ஒரு சிறு பொழுதைத்தானே
நாம் கழித்தோம் - அதற்கிடையிலா
முடிவு நாள் வந்தது.....
என்று
நாம் சொல்லிக் கொள்வோம்.....

பொய்யெல்லாம் உண்மையான
கதையொன்றைச் சொல்லவா....
அது நடந்து முடிந்து விட்டது
என்னிடம் யாரும் நியாயம் கேட்க முடியாது......
என்று விட்டு
நரகத்தில் தஞ்சமடைந்து விடுவான் சைத்தான்.....

பின்னாலும் முன்னாலும்
பாவங்கள் சிரிக்கும்
கண்களும் காதுகளும்
கைகளும் கால்களும்
இதர உறுப்புக்களும்
நமக்கெதிராய் செயற்படத்
தயாராக இருக்கையிலே
மனம் மட்டும்
ஒரு நாள் பொழுதாவது எங்களை
மீண்டும் அனுப்பினால்
நல்ல பெறுபேற்றை பெறுவோம் என
பிரார்த்திக்கத் தொடங்கி விடும்.......

சரிதான்.....
சந்தித்துக் கொள்வோம்
அப்போது நாம் அறிமுகமாகிக் கொள்வோம்.......

# புரட்டப்படும் நாள்

வேதத்தை புரட்டவில்லை
அவர்கள்
வேகத்தில் புரளுமளவில் கூட
இன்னும்
வேதத்தை புரட்டவில்லை......

நானும் அழைக்கப்படுவேன்
நாளை - சாட்சிக்கு
நான்
என்ன சொல்வேன்
என்று
புரட்டியவர்கள் அறிவர்
ஆனால்
புரட்டாதவர் கதி......?!

வேண்டுதல்களுக்கும்
கோரிக்கைகளுக்கும்
ஆளாக்கப்படுகிறேன்
பாலாலும் நீராலும்
எனக்கே தெரியாத இன்னும் பலவற்றாலும்
குளிக்க வைக்கப்படுகிறேன்.......

என்ன வடிவம்
கொண்டுள்ளேன் - என அறிந்திட
கண்ணாடியில் நான் காட்டப்படவில்லை....
புரட்டாதவர்கள் மட்டும்
என்னை புதுப்பிக்கிறார்கள்

அவர்கள்
புரட்டப்படும் போது
கைவிட்டு விடுவேன் - நிச்சயமாக

ஏனெனில்
புரட்டப்படும் நாள் பற்றி அறிந்த
வடிவங்கள் அளிக்கப்பட்ட
சிலையாக இருக்கின்றேன்......
நான்

## கொண்டு செல்வதை மட்டும்.......

சேகரிப்பு தொடர்கிறது
தேவையானவைகளை பட்டியலிட்டு முடிக்கிறேன்
ஆறடி நிலம் வெட்டுவது என் பொறுப்பல்ல
மற்ற மற்றவைகளை எடுத்துச் செய்ய
உறவினர்கள் உண்டு.....
அதனால் அதிகம் சிரமமில்லை
வெள்ளைத் துணியை மட்டும்
இப்போதே பார்க்க வேண்டும் போல்........
கடைசியில் எனக்கான துணை அது மட்டுமே என்பதால்

வாழ்வியலில் விருப்பம் ஏற்பட்ட போது
மரணம் அறிமுகமாகிக் கொண்டது
உறவாய் இருந்த உறவொன்று
உயிரிழந்து கிடந்து
உலகை கேள்விக்குறியாக்கியது.....

மரணத்தை கைக்குள் வைத்துக் கொண்டு
நானும் ஆராயத் தொடங்கினேன்
கேள்விக்குறி ஆச்சரியக் குறியானது
எதுமில்லாத உலகை அறிந்து கொண்டதால்
எல்லாவற்றையும் சிந்தித்தது மனது.......

மரணமே -
உனக்குப் பயந்து யார்
எங்கு மறைவிடம் காண முடியும்........?
மறைவிடமெல்லாம் உன்
உறைவிடம் அல்லவா........?

என் ஒவ்வொரு நேரக் காரியத்திலும்
ஏதாவது ஒன்று உன்னை நினைவு படுத்திச் செல்கிறது.
எப்போதும் நிகழலாம் என்பதால் தான்
சேகரிப்பு தொடர்கிறது....

பூமி பார்த்து வானம் பார்த்து
பூக்கள் பார்த்து நிலவு பார்த்து
இருந்தும் இல்லாமல் போக
இல்லாமல் போகும் தருணங்களில்
புரிந்து கொண்டால் நல்லதே எதை சேகரிக்க வேண்டுமென்று.

# கவிதை என்றான என்

# கிறுக்கல்கள்

## கிறுக்கல் வகை - 02

01. என்னை எழுதிய கவிதை
02. கவிதையின் (மன) சாட்சி
03. கவிதையும் இல்ல கத்தரிக்காயும் இல்ல
04. கவிதை பற்றிய குறிப்பு – I
05. கவிதை பற்றிய குறிப்பு – II
06. நிகழ்தகவாய் நான்
07. பதினைந்து தொடங்கி இருபத்தைந்து வரை
08. மறதி ஒரு பூனை
09. புரூட்டஸ் நீயுமா.....?
10. சதை போர்த்திய எலும்புக்கூடு
11. என் மனதின் பெறுபேறுகள் காத்திரமானவை
12. உங்களில் சிறந்தவர்
13. மீண்டும் மிதந்து வரும் துர்நாற்றம்
14. புத்திக்குள் திணித்த அரிய வேலை
15. வண்ணத்துப் பூச்சிகள் இல்லாத வசந்த காலம்

## என்னை எழுதிய கவிதை

நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த
என்னை
அந்தக் கவிதை
பலமாகத் தட்டி எழுப்பியது....

நான் எழும்பாமல் இருக்க
தண்ணீர் கொஞ்சம்
எடுத்து வந்து - என்
முகத்தில் ஊற்றியது....

பின் - எழும்பிய என்னை
அடித்தடித்து துவைத்து
பின் நன்றாக முறுக்கி
கொடியில் கொண்டு போய் போட்டது......

"சுள்" என்று வெயில்
எரிந்து கொண்டிருந்தும்
நான் காயவே இல்லை....

பொறுமையில்லாத
அந்தக் கவிதை
உஷ்ணம் கக்கும்
மின் விசிறிக்கு முன்னால்
என்னை விரித்தது......

பல மணி நேரங்களின் பின்
உலர்ந்தும் உலராமல் இருந்த
என்னை
என் மேசை முன்னால் நிறுத்தி
எழுது - என்றது
அன்று முதல்
என் வெள்ளைத்தாள்கள்
ஆடை அணிந்து கொண்டேயிருக்கிறது...
என் பேனாக்கள்
நிர்வாணம் அணிந்து கொண்டேயிருக்கிறது.....

# கவிதையின் (மன) சாட்சி

கணிதக் கோடுகளையும் வட்டங்களையும்
சிறுக்குவதை நிறுத்தி விட்டு
நல்ல எழுத்துக்களை பிரசவிக்கச் சொல்லி
உன் பேனாக்களுக்கு அறிவுரை சொல்லேன்....
அவை
கவிதைகளாக இருந்தால் நல்லதென்று
நினைக்கிறேன்.....
ஆமாம் - விலங்கிடப்படாத கவிதை

ஏன் உன் வார்த்தைகளுக்கு
சோகத்தால் வர்ணம் தீட்டுகிறாய்......?
எனக்குப் பிடிக்கவே இல்லை
மகிழ்ச்சியை நீ தடை செய்வது
எனக்கு அறவே பிடிக்கவில்லை.......

அழுவதற்கு உன் கவிதையில்
ஏராளம் இருப்பது போல்
சிரிப்பதற்கும் களிப்பதற்கும்
ஏன் நீ கவிதை நெய்யக் கூடாது.......?

அது என்ன
உன் பேனா மை - கறுப்பிலும்
உன் காகிதம் - வெள்ளையிலும் தானா?
சந்தையில் வர்ணப் பேனாக்களின்
வருகை பற்றி
நீ கேள்விப்பட்டதே இலையா......?

நவீனத்துவத்தை ஏன் உன் கவிதைகளுக்கு
ஆடைகளாக அணிவிக்கக் கூடாது........?
சில வேளை
அவை உன்னை
பிரபல்யம் அடையச் செய்யலாம் அல்லவா.......?

கற்பனைகளை மட்டும்
நீ கட்டவிழ்த்துக் கொண்டு
திரிவதில் எனக்கு உடன்பாடில்லை
யதார்த்தத்தைப் பற்றியும் பேசலாமே.........?

உன்
மூச்சுக் காற்றை யாரும் சுவாசிக்க முடியாது
பிராணவாயு மட்டுமே
உள்ளெடுக்கத் தகும்.....

ஆனால்
உன் போல எல்லோரும் சுவாசிக்க முடியும்
இது போல
ஒரு தனித்துவத்தை
உன் கவிதைகளில் பேணிக்கொள்.....

சரி ............
இருட்டுக்களை எல்லாம் தடைசெய்ய
உன் கவிதை - விளக்குகள்
உதவட்டும்....................

## *கவிதையும் இல்ல கத்தரிக்காவும் இல்ல*

நான் பேனையை
எடுத்து விட்டாலே
தம்பி
நக்கலடித்துச் சிரிக்கிறான்............!
முதலிரு தடவைகள்
நானும் சிரித்துக் கொண்டாலும்
எல்லாத் தடவைகளிலும்
அது தான் தொடர்கிறது......

ஏசி ஏசி தீராமல்
அடிக்கவும் போய் விட்டேன்
ஆனாலும் அவன்
சிரிப்பதை விடவில்லை.......

இனிமேலும்
எழுதாமல் இருப்போம் என்றால்
என் எல்லா பக்கத்திலும்
கவிதை நிரம்பி வழிகிறது.............

ஒளித்தொளித்து
எழுத அமர்ந்தால்
எப்படியே கண்டு பிடித்து விடுகிறான்.....
பொய் - பேசினால் தான்
பிடிக்காதா?

எழுதினால் பரவாயில்லையா?
எனக் கேட்டு
என் தம்பி
நக்கலடித்துச் சிரிக்கையிலே
என் கோபம்
சில கவிஞர்கள் மீது.....

"இது கவிதையும் இல்ல
கத்தரிக்காயும் இல்ல"
வெறுப்புடன்
அவனைப் பார்த்து கத்துகிறேன்.......
பாவி
அதற்கும் சிரிக்கிறான்........

# கவிதை பற்றிய குறிப்பு – I

இருந்ததாய் அறியப்படும்
டைனோசர்களின் உலகம்
மனித நடமாட்டம் இல்லாத
இடங்களில் மலைப் பாம்புகளின்
எச்சங்கள்....
கடலிலிருந்து தேனீக்கள் கிளம்ப
அலைகளிலெல்லாம் பூக்கள்
யானைக் குஞ்சுகள் எறும்புகளிடம்
வேலை தேடி அலையும் நேரங்களில்
பூனைகள் பறந்து பறந்து திரிகிறது........
கால் முளைத்த பாம்புகள்
நடந்து திரிய
கழுகுகளெல்லாம் ஊர்ந்து ஊர்ந்து
இரை தேடும் அவலம்
இவ்வாறு எழுதப்பட்ட
ஹொலிவுட் கவிதைக்குள்
மனித நடமாட்டம்.........

ஒரு வேளை
ஆக்கிரமிப்பும் நாடு பறித்தலும்
இல்லாமல் போயிருந்தால்
காந்தியும் நேருவும்
உருவாக வாய்ப்பில்லையே........
என்றும்

பூமி சுழலச்சுழல நிலவு மறைகிறது
இன்னும் நிலவு தேய்கிறது என
எழுதுபவர்களை என்னவென்பது........
இவ்வாறு உண்மைகள் மறைக்கப்படுவதால் தான்
கவிதைகள் பொய்யாகிறதோ என்னவோ.........
என்றும்
இருவேறு கவிதைகள் பேசிக் கொள்கின்றன......
மலைகளைக் குன்றுகளாயும்
கடல்களைக் கிணறுகளாயும்
காட்டிய கவிதைக்குள் குழப்பம்
மாறுபட்ட கவிதைகளின் வருகை பற்றி
விசாரிக்க - இப்போதெல்லாம்
கவிதைகள் எழுதப்படுவது இவ்வாறுதான்
என்கிறது புதிய கவிதைகள்......

# கவிதை பற்றிய குறிப்பு – II

எழுதத் தொடங்கு
என்னருமைப் பேனாவே
நீதான் எனது நம்பிக்கை.....

கால் வைத்து நடக்க முடியாது என் வீட்டில்
எழுத்துக்கள் சிதறிக் கிடப்பதால்........
பொறுக்கி பாத்திரத்திலிட்டு
கவிதை சமைக்கிறேன் - அல்லது
எட்டி எட்டி நடந்து பட்டினி கிடக்கிறேன்.......

தூரத்து நாயின் ஊளையிடலை
என் பேனா புல்லாங்குழலோசை
என்று பதிவு செய்கிறது....
உம்மாவின் அன்றாடப் பேச்சை
என் பேனா ஒட்சிசன் என்று
சொல்லிக் கொள்கிறது......
என்னால் மறு பேச்சு பேச இயலாது
இதுவெல்லாம் கவிதை என்று
பேனா சொல்லிக் கொள்கிறது......
பரவாயில்லை
என்னருமைப் பேனாவே
நீதான் எனக்கு ஆறாம் விரல்

சுவர்களுக்கு காது முளைத்த கதையையும்
காக்கைகளின் உணவுச் சண்டையையும்
பாடல்களின் தரித்திர நயங்களையும்
என் பேனாதான் எனக்குச் சொல்லித் தந்தது......
மிகப் பெரும் ஊர் சுற்றியாகவும் என் மனதை
அது மாற்றி வைத்திருக்கிறது.....
புதினங்கள் எல்லாம் என் வெள்ளைத்தாள்களில்......

இது என்னருமைப் பேனா
என் விரல்களுக்குள் கம்பீரமாய் நின்று
கிறுக்கல் செய்கிறது.....
எழுதுவது என்னவென்று கேட்கத்தோன்றி
வார்த்தைகள் புறப்பட்ட போது
கவிதை என நினைக்கிறேன் என்றது பேனா.........

# நிகழ்தகவாய் நான்

என் வீட்டு முற்றத்தில்
தோல்வி பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த
காலத்தில்
நானும் நம்பிக்கையும்
நண்பர்களாயிருந்தோம்......

வெற்றி
என் விலாசத்தை
அறிந்து கொண்ட போது
நானும் நம்பிக்கையும்
காதலர்களாயிருந்தோம்........
எப்போதும் நம்பிக்கை
என் கூடவே இருப்பதைக் கண்ட
தலைக்கனம்
என் விருந்தாளியாய்
வரத் தொடங்கியது......

நாளடைவில்
தலைக்கனம்
என் வீட்டிலேயே தங்கிக் கொள்ள
ஏற்கனவே குடியிருந்த
மரியாதையும் கௌரவமும்
விடை பெற்று விட்டன........

எப்போதாவது
தலைக்கனம்
வெளியே செல்ல நேர்ந்தால்
நம்பிகையும் கூட்டு சேர்ந்து விடும்
அது வீடு திரும்புகையில்
பயத்தையும் விரக்தியையும்
அறிமுகம் செய்து வைக்கும்.........

இனி
குப்பைகளால் நிறைந்து கிடக்கும்
என் முற்றத்தை
சுத்தம் செய்திட
பணிவும் அடக்கமும்
பங்காளியாக வேண்டுமெனில்
தோல்வியும் பூக்க வேண்டும் என
நம்பிக்கை அறிவுரை சொல்ல
தலைக்கனம் சத்தமாக சிரித்துக் கொள்கிறது......

## *பதினைந்து தொடங்கி இருபத்தைந்து வரை*

என்னென்னவெல்லாம் செய்தாலும்
என்ன செய்ய வேண்டும்
என்பது தெரியாமல் போகிறது......

அமர்ந்து பேசிட வில்லை
என்று சொன்னால்
நடந்து திரியவே
நேரம் போதவில்லை.........

தொடுதிரை கைபேசி
ஏன் வந்ததென்ற நோக்கம் மறந்த
ஏதேதோ வெல்லாம் செய்து கொண்டு
கிடக்கிறது......

படிப்போ பாடத்தில் நிறைவோ இன்றி
நாளுக்கோர் உடைகள்
மாறி மாறி வர்ணம் காட்ட
தலை முடியும் மாற்றம் கேட்கிறது.....

எரிபொருள் விலை உயர்வு
எதனால் என்று புரிந்தாலும்
பருவம் செய்த கோளாறு
என்கிறது பாழாய்ப் போன மனது.......

நேரம் தவறி வேலைகள் நடக்க
கடிகாரம் பார்த்து
கவனமாய் செய்யும் வேலையாக
மாறிப்போன தொலைக்காட்சிப் பார்வை.......

பாடம் மீட்டவும்
பரீட்சைக்கு படிக்கவும்
நேரம் ஒதுக்காத பின்னேர வகுப்புகள்
தோழிகளுடன் பேசிச்சிரிப்பதில் கழிகிறது.....

## மறதி ஒரு பூனை

இழுக்கும் பக்கமெல்லாம்
பிடிவாதமின்றி செல்லும்
பூனைக்குட்டியாய் நான்
கழுத்தில் கட்டியிருப்பது
மறதி எனும் சங்கிலி......
ஆனால்
பூனை போல்
மெதுவாகவோ
அமைதியாகவோ
நடக்கவும் தெரியவில்லை.......
சும்மா கிடக்கவும் தெரியவில்லை.......

கவிதைக்கு உவமானமாக மட்டும்
அந்த ஜீவனைப் பயன்படுத்துகின்றேன்.....

தலை சுற்றிக் கிடக்கும்
நினைவுகளை மீட்டிப்பார்க்க
மறதியை செயற்படுத்தும் கருவியாக
என் இதயம்..........
நேரம் கடந்த பின்தான்
அந்தந்த நேரக் காரியங்களை
மறதி நினைவு படுத்துகிறது......

ஆயிரத்து நானூற்று நாற்பது நிமிட நாளில்
பெரும்பான்மை நிமிடங்கள்
மறதியுடன் கைகோர்த்தவாறே கழிகிறது........

நான் மனிதன் என்று
உணரும் போதெல்லாம்
மறதி பூனைக் குட்டியாகி
என்னைச் சுற்றிச் சுற்றி
வருகிறது......

இந்த பூனைக்குட்டி
வேகமானதாயும் உள்ளது.........
விவேகமானதாயும் உள்ளது........

## ஏருட்டஸ் நீயுமா.......?

சுவரும் பல்லியும் போல
எப்போதும் ஒட்டிக் கொண்டு
திரிந்தவர்கள் ஏராளம்......
பள்ளிக்கால நினைவுகளில்
குதித்து நீந்துகிறேன்......
ஏதோ ஒரு மரம் உள்ள
சிறு தரையில் கரை சேர்ந்து பார்த்தால்
நீர் நிரம்பி - கைவிடப்பட்ட
தோணி போல நானும் நட்பும்.....

திக்குவாய் இல்லாத
சபதங்கள் இல்லாத
"டெமொஸ்தனீஸ்"களாய்
உலா வந்த நாட்கள்
கிளுகிளுப்பானவை......
எல்லாக் காலத்திலும் அல்ல
ஏதோ ஒரு காலத்தில்
நீ
என்னைக் கைவிட்டாய்
அப்போது
என் நட்பு அழுதிருக்கும்
நான் அழுததில்லை......

கதை சொல்ல மட்டும்
பேனை திறக்கும் யாராவது
ஒரு எழுத்தாளனின்
சிறுகதைகளாக நீ இருக்கலாம்
ஆனால் நானோ
"காக்காய் பார்லிமெண்ட்"

பல்லிகள் ஒட்டாத சுவருகள் இல்லை
ஒவ்வொரு பள்ளிக்காலமும் நட்புடன்தான்
எல்லா நட்பிலும் எப்படியோ
ஒரு புருட்டஸ் இல்லாமல் இல்லை தான்.......

டெமாஸ்தனீஸ் - கிரேக்கத்தின் தலைசிறந்த சொற்பொழிவாளர்

புருட்டஸ் - ரோம் அரசன் சீசரின் தோழன் - (துரோகி என்கிறது வரலாறு)

காக்காய் பார்லிமெண்ட் - மகாகவி பாரதி எழுதிய ஒரேயொரு சிறுகதை

## சதை போர்த்திய எலும்புக்கூடு

என்னை
இழுத்து வைத்து திட்டித்தீர்க்கிறேன்
கோபம் அடங்கவில்லை....
ஆயுதம் எதுவும் கிடைத்திடாதா
என்ற தவிப்பு மேலோங்க
வெறுப்புடன் என்னைப் பார்க்கிறேன்......

வெளியேறும் போதும்
சில வேளைகளில்
உள் வரும் போதும்
மனசாட்சியை கழற்றி
பொறுப்பில்லாமல் தூக்கி எறிந்து விட்டு
செயலாற்றுவதை
கொஞ்ச நாட்களாக
வழக்கமாக கொண்டிருந்தேன்......

ஆனால்
அதிக நேரம் சும்மா அது கிடப்பதில்லை
எங்கு சென்றாலும் ஓடி வந்த ஒட்டிக் கொள்ளும்
மன்னிப்பு
இரங்கல்
அன்பு பாசம்

இன்னும் பலவற்றோடு
தன் வேலையை காட்ட வாரம்பித்து விடும்
இன்று
விடுவதாய் இல்லை
வாய்க்கு வந்தபடி எல்லாம்
என்னை நானே - சலிக்காமல்
வதைத்து எடுத்து விட்டேன்.....
கடைசியில்
'எதிரிக்கும் வாழ்வளிக்கும் மார்க்கம் நம்முடையது'
என்று விட்டு
அமைதியாகிறது மனசாட்சி!
என் இதயமெல்லாம் இரத்தம்
இப்போது தான்
வலியை உணருகிறேன்............

## என் மனதின் பெறுபேறுகள் காத்திரமானவை

என் மனதின் பெறுபேறுகள் காத்திரமானவை
அல் நோக்கல் போலிகளும்
வலு நோக்கல் போலிகளும்
அதிகமாகக் குவிந்த கிடக்கும் என் மனது
சமச்சீரற்றது..........
அது
பல்வேறு வடிவம் கொண்டது......

ஒரு விடயத்தில் இன்னொரு விடயம்
தடையிடப்படக்கூடாத
வலுவேறாக்கம் தான்
எனக்கான அநேகரின் எதிர்பார்ப்பு....
மொன்டஸ்கியூ தவறிப் போனான்

சில வேளை நானும்
உற்பத்திச் சாத்திய வளையியின்
உள்ளே இடப்பட்ட புள்ளியாகிறேன்.....
சாத்தியக் கோட்டை அடைய
என் முயற்சி மட்டும் போதாது
என்பது உறுதி - ஆனால்
என் மனதின் பெறுபேறுகள் காத்திரமானவை

கெபினட் மனதுக்குள்
தினம் நியாயமில்லா சச்சரவுகள்
எலியை புலியென்றும்
பசுவை கொசுவென்றும் வாதாடும்
அர்த்தமில்லா தத்துவங்கள்......
எனினும்
உற்பத்தியே இன்றி நிரம்பல் அதிகரிப்பது தான்
ஆச்சரியம்..........

பல தடவை படிக்க முயன்று
முடியாமல்
இன்னொரு தடவை முயற்சி செய்ய
குழப்பிப் போன மண்டையோடுகள்
எப்போதாவது அகழ்வாராய்ச்சிக்கு உதவலாம்
எப்படிப் போனாலும்
என் மனதின் பெறுபேறுகள் காத்திரமானவை........

## உங்களில் சிறந்தவர்

படிக்கப்படாமல்
இருக்கும் புத்தகங்கள் ஏராளம்.......
புழுதி படிந்து
அதன் பாரம் அதிகரித்த
ஆஸ்த்துமாவுக்குப் பயந்து
நீ கிட்டே நெருங்குவதில்லை.......
இருக்கும் இடத்திலேயே
எல்லாம் கிடைத்திட வேண்டும் உனக்கு

உன் கையாகவும்
உன் காலாகவும் - இன்னும்
எல்லா இயந்திரமாகவும்
உனக்காக - உன்னால்
விலை பேசப்பட்ட ஒரு ஜீவன்...........

நீ சுற்றி விட்டால் - அவள் விசிறி
நீ பற்ற வைத்தால் - அவள் அடுப்பு
நீ சொல்ல நினைத்தால்
அவள் எழுத்தாகி
வார்த்தையாகி, வாக்கியமாகி
சிலவேளை வாக்குவாதமாய் கூட
மாறி விடுவாள்........

காலுக்கு செறுப்பாயும்
கைகளுக்கு குடையாயும்
அவள்
நீ வாக்களிக்காமலே
சேவை செய்யும் அதிகாரி

உன்னால்
படிக்கப்படாமல் கிடக்கும்
புத்தகமாய்
அவள் (மனம்) இருக்க
நிச்சயமாய்
உங்களில் சிறந்தவர்
உங்கள் மனைவிக்குச்
சிறந்தவரே.........

## மீண்டும் மிதந்து வரும் துர்நாற்றம்

இது நான் நீந்துதல் செய்யும் வாழ்க்கை
சில நாட்களாக என் கைகள்
சுத்தமாகத் தொடங்கியிருக்கிறது......
இதை சொல்லி முடிப்பதற்கிடையில்
காற்று வீசும் பக்கமாக
மிதந்து வந்த துர்நாற்றத்தைத் தொட்டு
முகர்ந்து விட்டதால்
மீண்டும் அசுத்தம்.....

கொஞ்சம் ஈரம் சேர்த்து
மனதுக்குள் ஊற்ற வேண்டும்
பின் காய விடாமல்
கால நிலையை பேணவேண்டிய
தேவையும் உள்ளது........

வெறுங்காலுடன் நடந்து
வீட்டுக்குள் வந்தபின்
ஒட்டியிருந்த மணல் துடைக்க
குனிந்து - விழுந்து
உடம்பெல்லாம் மணல் துடைக்க
குனிந்து - விழுந்து
உடம்பெல்லாம் மணல் பூசிக் கொள்கிறேன்

முழுகி துப்பரவு செய்ய
விடுமா இந்த வாழ்க்கை........?!
சாக்கடைக்குள் என்னை வீழ்த்தி விட்டுத்தான்
மரணத்தை அழைத்து வரும்.....
பின் என்ன.......
முறிந்த கிளையை மரத்தோடு
சேர்த்துக் கட்டி
மீண்டும் முளைப்பித்து
காய் பார்த்து
கழுவி பழுக்க வைத்து ருசித்து முடித்து
மணல் தோண்டி புதைக்கும் வரை
எனக்குள் போராட்டம்.......

இது மரணத்துடனான
கெஞ்சலும் மெனக்கெடலும்......
நல்ல குப்பை வாரி
தண்ணீர் வாளியுடன் தும்புக்கட்டையும் கொண்டு
தேய்த்துத் தேய்த்து போக்க வேண்டும்
என் அசுத்தங்களை.........

## புத்திக்குள் திணித்த அரிய வேலை

இந்த எண்ணங்களை
கடன் வாங்கி
என் புத்திக்குள் திணித்த
அரிய வேலையைச் செய்து
புண்ணியம் தேடிக் கொண்டது யாரோ........

மனதின் இயக்கம்
எல்லா வகை எண்ணங்களையும்
எண்ணத்தவறுவதில்லை
எண்ணங்கள் அதிகரித்து
மரணத்தை தழுவுதலை விரும்பிற்று......

மூளை தான் மேலதிகாரி
ஆனால்
மனது பெரும் அடாவடித்தனமானது
யார் பேச்சையும் கேட்க நினைப்பதில்லை
அது போலத்தான் என் எழுத்துக்களும்....

மூளையின் அலட்டுதல்
எதிர்காலம் பற்றியது.......
மனமோ
இன்று மட்டுமே இருப்பிடம்
என்று சொல்லிக் கொண்டு
பேயாடித்திரிகிறது
கூடவே என் கற்பனைகளும்.......

மூளை பெரும் தத்துவவாதிதான்
எல்லாவற்றையும் பேசச் சொல்லும்
அவ்வாறில்லை மனம்
வேண்டியதை மட்டும்
முகத்திலடித்து விடும்........
என் வார்த்தைகள் போல

இதற்காகத்தான் என் மனதை
எனக்குப் பிடித்துப் போயிற்று.........
என்றாலும்
இரவு நேரத் தனிமையில்
மனதை
எங்காவது புதைத்து விடுதல் வழக்கம்
தூக்கத்தை கெடுப்பதில்
அது படுசுட்டி என்பதால்.......

அப்போது சிலவேளை
மூளை கேட்டுக் கொள்ளும்
யார் தான்
இந்த எண்ணங்களை
கடன் வாங்கி
என் புத்திக்குள் திணித்து
புண்ணியம் தேடிக் கொண்டதோ........?!

# வண்ணத்துப் பூச்சிகள் இல்லாத வசந்த காலம்

மயிர் கொட்டிப் புழுக்கள் போல
நீயும் உன் நினைவுகளும்.......

மயிர் கொட்டிப் புழுக்களைக்
கண்டால் பயம் தான்
ஒவ்வொன்றாய் மயிர் கொட்டி
உடலில் ஒவ்வாமையை தருபவை
என்பதால்
தீவைத்தோ
நசுக்கியோ
கொல்லப்பட்டு விடும்.......

நீயும் தான்
உன் நினைவுகளால்
ஊர்ந்து ஊர்ந்து
உலகுக்கு என் இதயத்தை
ஒவ்வாமைப்படுத்துகிறாய்.......
கொன்று விடலாம் தான்.

பட்டாம் பூச்சிகள் புறப்படப் போவதில்லை
என்றிருந்தால்........
மயிர் கொட்டுவதே -நீ
வண்ணப் பூச்சியாய்
மாறுதற்கே என்று
இல்லை என்றிருந்தால்
கொன்றிருப்பேன் தான்
உன்னையும் உன் நினைவுகளையும்

இப்போது -
நீயும் உன் நினைவுகளும்
வண்ண வண்ண பூச்சிகள்
எந்நேரமும் என்னையே சுற்றிச் சுற்றி........
நிஜத்தில் - வசந்த காலம் - ஆய்வுகள் - முடிவுகள்
வண்ணத்துப் பூச்சிகள் அருகிப் போயின
உண்மையில்
பூவரசமும் முருங்கையும்.........

எங்காவது ஒரு முருங்கை
நசுக்கப்பட்டோ
எரிக்கப்பட்டோ
உயிர் துறக்கும் பட்டாம் பூச்சிகள்.....

இனி
என்றும்
நீயும் உன் நினைவுகளும்
தரும் இன்பத்தை
உலகம் பெறப்போவதில்ல..........

# கவிதை என்றான என் கிறுக்கல்கள்

## கிறுக்கல் வகை - 03

01. என் கண்ணீரும் வீண் கற்பனைகளும்
02. நிலவும் விழுந்து, நட்சத்திரமும் உதிர்ந்து
03. வேலையற்றவனின் வேலை
04. ஊமைக் காயங்கள்
05. முகவரி தொலைத்த மனதுடன்
06. விண்ணப்பம் மற்றும் வேண்டுகோள்
07. பரவாயில்லை
08. மின்சாரம் இல்லாத வயர் துண்டு
09. சாம்பல்
10. தீர்ப்பு
11. நினைக்கிறேன் – மறக்கலாம் என
12. ஏதோ ஒரு நேற்று

## என் கண்ணீரும் வீண் கற்பனைகளும்

சில வேளை
என் கண்ணீரும் வீண் கற்பனைகளும்
உனைத்தேடி வந்தால்
புன்னகையால் வழியனுப்பு.......
எனக்குத் தெரியும்
நீ காற்று வீசக் காரணம் கேட்க மாட்டாய்.......

இங்கே
கால் தடம் இல்லை
ஆனால்
உன் நிழல் உலவித்திரிகிறது......
என்னைக் காணும் போதெல்லாம்
என் நலம் கேட்டு
என்னை நன்றாக கவனிக்கும் படி
அறிவுரை சொல்கிறது.....
தலைகோதி முத்தமிடுதல் இன்றி.....

'பழைய கவிதை' என்று
நீ
உன்னைச் சொல்லிக் கொள்கிறாயா......?
உணர்ந்து கொள்
ஒவ்வொரு தடவையும்
என்னுள் கவிதையாய் பூப்பது
நீ மட்டும் தான்.........

உன் விரல்களை
இழந்து பெற்றுக் கொண்டதால்
என் கண்ணீருக்கு
சுதந்திரம் கிடைத்த நாள் பற்றி
என் நாட்குறிப்பில்
எழுத மறந்து போனேன்
எனினும்
உன்னிடமிருந்தான முழுப்பதிப்புரிமையை
பெற்ற கவிதைகள் என்னுடையவை
இனியும்
உரிமை மறுத்து விடாதே
உன்னைத் தான்
என் கவிதைகள் தலைப்பாக்கிக் கொண்டுள்ளன......

## நிலவும் விழுந்து நட்சத்திரமும் உதிர்ந்து

விடியற்காலை பனித்துளி போன்றதொரு
இதமான அனுபவத்தை தரக்கூடிய
பெண் ஒருத்தியின் கதை இது.......

சுவாரஷ்யமான கவிதை போல
அவளது வாழ்க்கை அமைய வேண்டும்
என்பது எனது எதிர்பார்ப்பு
அதில் முக்கிய அங்கமாய் நான் இருக்க வேண்டுமென்று
கனவு கண்ட காலமெல்லாம்
கலைந்து - கண்கெட்டு போய் விட்டது.........

இரவு நேரக் காதல் கீதம் போல
தெவிட்டாத குரலையுடைய அவள்
இப்போது பேசுவதில்லையாம்
கூண்டுக்கிளியை தனக்கு உவமையாக்கிக் கொள்கிறாள்

சிறு பூச்சியின் சாவுக்கும்
கவலைப்பட்டுக் காலம் கழிக்கும்
அவளது மனம் எல்லா விதமான
அநீதிக்கும் எண்ணீர் சிந்தியவாறே இருக்கும்
ஆனால்
அவளுக்காக கவலைப்பட யாருமில்லை
நான் மட்டும் இருக்கிறேன்
அவளுக்காக செயலாற்றும் எல்லாவற்றையும் இழந்து....

ரோஜாப்பூக்களை ஒவ்வொன்றாய்
எரிவது போல் அவள் நடந்து திரிகையில்
என்னால் சில முத்துக்களை உதிர்ப்பாள்......
இப்போது அவளுடன் நானில்லை...
சில போது அழைப்பை ஏற்றால்
பாராங்கற்களுக்கிடையில்
நசுக்கப்படுவதாக கூறுகிறாள்........

மீட்டு விடும் கோரிக்கைகளை முன் வைத்தபடி
அழைப்பை துண்டிக்கிறாள்.....

முன்னொரு காலத்தில்
அவளது வாழ்க்கையை நான் தீர்மானித்தேன்
பயந்த சுபாவமுள்ள அவளது கைகளுக்குள்
ஈரம் சொட்டியவாறே இருக்கும்
என் விரல்களை இறுகப் பற்றும் போது
அவள் அவளாக இருக்கிறாள்
எனச் சொல்லிக் கொள்ளுவாள்....

முழு நேர ரசிகை அவள்
புனித மார்க்கத்தின் மேல்
அவள் பேச்சிலும் நடத்தையிலும்
அது தான் முதல் நிற்கும்
இருந்தும்
பிரார்த்தனைகள் நிராகரிக்கப்பட்டவளாகவே
நான் அவளைக் காண்கிறேன்
ஆனால்
இன்னும் அதிகமான தீவிர ரசிகையாகவே திகழ்கிறாள்....

முழு நேரக் கண்ணீர்க் கதையாக
மாறியிருக்கும் அவளிடம் செல்லும்
என் வார்த்தை ரீதியான ஆறுதல்கள் எல்லாம்
கண்ணாடியில் பட்டுத் தெறிக்கும் ஒளிக்கற்றைகள் தான்
திரும்பி விடுகின்றன சென்ற வேகத்தில்.....

பிரார்த்தித்துக் கொண்டுதான் இருக்கிறேன்
அவளுக்காக..........
பிரார்த்தனைகளை அதிகரி என்பவள்
மகிழ்சியான வாழ்வுக்காக வா எனக்கேட்டால்
இல்லை- மரணத்துக்காக
என்கிறாள்
அப்படியே செய்கிறேன்
எனக்குமாக சேர்த்து.....

# வேலையற்றவனின் வேலை

காதல் விடைபெற்று விட்டது
இனி
கவிதை எழுத நேரமில்ல........
கண்ணீருக்கு
பிரியாவிடை சொன்ன கண்களுடன்
காலம் கழிகிறது.........

கனவுகளுக்கு தடை போட்டாயிற்று
தாங்குவதில் விருப்பமில்லை
மழைச் சாரலின் முகவரி தேடி
கதவைத் தட்டுவது மில்லை.....
கிழித்துப் போட்ட கடிதங்களில்
வெயிலும் மழையும் மாறி மாறி உமிழ்கிறது......
இந்நேரத்தில் அவை
எழுத்துக்கள் அழிந்து
வெறும் காதிதமாய்
போட்ட இடத்திலேயே கிடக்கக் கூடும்.........

காதல் கவிதைகளை வாசித்திட
மணித்தியாலங்களை
செலவிடுவதை விட்டு விட்டதால்
வானத்தை வெறிக்கவும்
கொசு விரட்டவும்
அந்த நேரத்தைப் பயன்படுத்தலாகி விட்டது......

ஒவ்வொரு நாளும் போராட்டம்
என்ன செய்து நேரத்தை கழிப்பதென்று........
பெருக்குதலிலும்
துணிகளை துவைப்பதிலும்
செலவிடப்படாத நேரங்கள்
வீணாக கழிந்த கொண்டிருப்பதாக விழும்
ஏச்சுக்களும் பேச்சுக்களும்
காற்றில் நிறையாத நாட்களே இல்லை
என்றாலும் காதல் விடைபெற்று விட்டது......

# ஊமைக்காயங்கள்

கலந்து பேசிய காலமெல்லாம்
குதூகளித்ததை விட
காயம் பற்றி கதைத்ததே அதிகம்

பள்ளிக் கால நினைவுகளில்
ரணங்களை மறக்க முடியாத
மனமாய் - இந்தத் தசைத்துண்டு
வலிகளைப் பாய்ச்சுகிறது
இரத்தத்தின் ஊடாக.........

கைக்குட்டையும்
கைக்கு கிட்டிய அத்தனை
துண்டு துண்டுகளையும்
சேகரித்து வருகிறேன்
உன் கண்ணீர் துடைக்க........
கைவிரல் தான்
வேண்டுமென்கிறாய் நீ...........

உன் வாசல் வழி வருவதை
தடுப்பது எது
என்று தான் தெரியவில்லை....

இப்போது நான்
முற்றத்தில் நின்று
நிலவை வெறிப்பதுமில்லை.......
ஜன்னல் திறந்து
தென்றலுக்கு வழிவிடுவதுமில்லை.......

தோழி.........
உன் காயங்களுக்கு
என்னை மருந்தாக்கிட நினைக்கிறேன்
மருந்து வேண்டாம்
மரணம் தான்
வேண்டு மென்கிறாய் நீ...........

## முகவரி தொலைத்த மனதுடன்

என் மனம்
ஆட்டவியலாத அத்திவாரமாகவும்
நிலையான மின்கம்பமாகவும்
நின்று கொண்டிருந்த காலம்
வெகு தூரமாகிப் போனதாக
உணருகிறேன்........

அவர்களெல்லாம்
என் மனதிலேயே
தடுக்கி விழுபவர்களாக இருந்தார்கள்
அப்போது
என் மனம் நிலமாக விருந்தது........
இன்னும் பலர்
கரை சேரக் காத்திருந்த போது
என் மனம் துடுப்பாக விருந்தது.....

ஒரு சிலர்
வெறுமையான காகிதமாகக் கிடந்த போது
என் மனம்
பேனையாகியிருந்தது........

இப்போது
அந்தக் காலம் வெகுதூரமானதாய்
உணருகிறேன்.........
கண்ணீர் இல்லாமல் அழுது கொண்டிருக்கும்
கண்கள்
எல்லாவற்றுக்கும் பழக்கப்பட்டது போல்
மனம் பழக்கப்படவில்லை..........

காலம் கடந்து
மனதை விட்டு
உன் நினைவுகளோடு சேர்த்து
எல்லாமே விடைபெற்ற போது தான்
நான் வெறும் கட்டாந்தரையானேன்......
எல்லாப்பக்கமும்
பயம் பாம்பு போல ஊர்கிறது......
இதயத்தைத் தாக்கி
தைரியத்தை துப்பி விட்டது
நோய் பிடித்த மனதுடன்
காலம் கழிகிறது...............

# விண்ணப்பம் மற்றும் வேண்டுகோள்

எனதிரவின் நிழலில் மற்றும்
என் எல்லாக்கால நேரங்களிலும்
சொர்க்கத்துக்கான கனவுகள்
நிலை பெற்று விட்டன........

உன்னிடம் ஒரு வேண்டுகோள்
நாம் ஏற்கனவே பேசிக் கொண்டதற்கமைய
சொர்க்கத்தின் இனிமையை சுவைக்கத் தயாராயிரு.....

வருட இறுதிப் பரீட்சையில் வெற்றி பெற
கண்விழிக்கவும் கஷ்டப்படவும்
வேண்டுமென்றால்
நம்மில் யாரும் அதை
கடினம் என்று சொல்லுவதில்லை....

மேலானதொன்றை பெறும் பரீட்சைக்காய்
வந்து விட்டு - அலட்சியமாய்
பாடம் படிக்கும் அனைவரில்
நாமும் ஒருவராகவோ, இருவராகவோ
இருக்க வேண்டாம்..........

காலம் மாற்றி வைத்திருக்கிறது
குழப்பம் செய்யும் படி ஏவி விட்டிருக்கிறது....
கண் விழித்திருக்கும் போதே
காட்சிகள் மங்கலாகிப் போகிறது-

விரல்களால் பலமுறை கசக்கிப் பின் பார்த்தால்
குருடு- எனக்குக் குருடு
பார்க்க வேண்டியதை பார்க்காமல்
விட்டு விட்டேன்...........
என் எழுத்துக்கள் அடம் பிடிக்கின்றன
அழிய மறுக்கின்றன.....
நான் சொல்கிறேன்
முதிர்ந்து கிழடாகி வாழ்ந்தாலும்
எல்லோருக்கும் மரணம் உண்டு
உயிருக்குயிராக உனை நினைத்து உருகினாலும்
அப்போது உன்னைப் பிரியத்தானே வேண்டும்
மெல்ல மெல்ல நான் பற்றிய பேச்சு மறந்து போகும்
ஆனால்
என் அழுகை தொடர்ந்து போகுமே...........

தாயராயிரு -
உன்னிடமிருந்தான எல்லா இன்பங்களையும்
பெறுவதற்காக - என் காத்திருப்பு

சந்திக்கலாம் சொர்க்கத்தில்.....

சிறிதை இங்கு நிகழ்த்தினாலும்
என் இரவுகள் மகிழ்வடையும்......

## பரவாயில்லை –

விடிவதற்கான
அறிகுறிகள் தெரிந்தாலும்
பனிமூட்டம் விலக வில்லை......
ஒவ்வொரு கவிதையாய்
பறக்கிறது - பின்
சிறகுகள் முறிந்து
அகதி முகாமில் தஞ்சம்.........

கொஞ்சம் உலாவித் திரிகிறேன்
முன் வீட்டுக் குழந்தை
நின்று கொண்டு சிரிக்கிறது........
அதற்காகவும் ஒரு கவிதை எழுதலாம்
ஆனால் எழுதப் போவதில்லை......

பாதை எது சேறு எது
எனத் தரியாமல் நடக்கிறேன்.......
செறுப்பில் அப்பி
நடக்கும் போது
உடையில் தெரித்தாலும் பரவாயில்லை....
அனாதைக் கவிதைகளை அள்ளி வந்து
உன் வீட்டின் முன்னால் குவித்து விடும் அவசரம்

வெளி வந்து பார்க்க நேர்ந்தால்
காரித்துப்பு.......
இல்லையென்றால்
கூட்டி அள்ளி
குப்பை மெசின் வரும் வரை காத்திரு......

காதல் தோல்வியெல்லாம் எனக்கில்லை.....
யாரும் வேடிக்கை பார்க்க
என்னை தேட வேண்டாம்......
காலையில் சில முக்கிய வேலைகளை
மறந்து போனேன்........
பனிமூட்டம் விலகிற்று
சூரியனைக் காணவில்லை.....
உதிக்காமல் போனால் போ.......
இன்னும் எத்தனை நேரத்துக்கு
நானும்
பல் விலக்காமல் இருக்க..........

# மின்சாரம் இல்லாத வயர்த்துண்டு

மின்சாரம் இல்லாத வயர்த்துண்டு
கோபப்படாதே
என்னைத்தான் சொல்லிக் கொண்டேன்.....

பழுது பார்க்கும் போது
தேவையில்லை என்று
கம்பிகளை சேகரித்து
என்னை தூர எறிந்தாய்....
இன்று நான்
மின்சாரம் இல்லாத வயர்த்துண்டு.......

இது என்ன
மக்கிப் போகாத தொன்று என்று
நெருப்பில் போட்டு
எரித்த விட்டு
மெழுகு திரி நினைப்பில்
என்னை கைகளிலே வைத்துப்பாத்தாய்...........

சுட்டு விட்டேன்
சுட்டு விட்டேன்
நீ கத்திய கத்தில் தான்
உண்மையில் நான் சுட்டு விட்டேன்

இப்போது நான்
தென்பட மாட்டேன்
உருகி பின் காய்ந்து
சாம்பல் படர்ந்து
மண் மூடி உன் பார்வைக்கு
என்னை மறைத்து விட்டது........

பார்த்தாயா........?!
உன் கையில் வடுவாகிப் போனேன்
எப்போதும்
சொண்டு காட்டி
உன் மூச்சுக் காற்றை பாய்ச்சுகிறாய்
நல்லது தான்
மின்சாரம் இல்லாத வயர்த் துண்டாய்ப் போனது.........
நான்......

## *சாம்பல்*

என் அந்தரங்கமெல்லாம்
நெருப்புக்கு - மிகவும் தெரிந்த தொன்றாகிப் போய் விட்டது
எரித்து விடத்தான் பிறந்தாலும்
சிரித்துக் கொள்கிறது
என்னைக் காணும் போதெல்லாம்..........

எனக்குள் நீ
கவிதைகள் தந்த போதெல்லாம்
என் பேனாவும்
என் தாள்களும்
ஓய்வாய் இருந்ததில்லை..........

இறந்து போய்க்கிடந்த
என் கவிதைகளையும்
உன் கடிதங்களையும்
உன் நினைவுச் சின்னங்களையும்
நெருப்புக்கு இரையாக்கி விட்டு
சாம்பலைத் தொட்டுப் பார்த்து
அழுது முடித்தது
கண்முன் விரிகிறது......

இப்போதும் - நீ

என்னுள் கவிதை
தந்து கொண்டுதான் இருக்கிறாய்.......
எழுத நினைக்கும் போதெல்லாம்
நெருப்பு - சிரிப்பது தான் தெரிகிறது.......
என்னதான் முயன்றாலும்
கவிதைக்கு பூட்டிட முடியவில்லை......
இனி,
கடைசி முயற்சியாய்
உன் நினைவுகளைச் சுமந்திருக்கும்
என் இதயத்துண்டை
கழற்றி எடுக்கிறேன்...........
என் அந்தரங்கமெல்லாம்
தெரிந்து போன நெருப்புக்குள் எரிய விட.....

என்ன செய்ய
எரித்து விடத்தான் பிறந்தாலும்
சிரித்துக் கொள்கிறது - நெருப்பு
என்னைக் காணும் போதெல்லாம்.

# தீர்ப்பு

இப்போதெல்லாம்
கனவுகளில் லயிப்பதில் விருப்பமில்லை.....
நீயின்றி தனியாக உலாவர வேண்டும்
என்பதனால்....
ஆனாலும்
அன்றொரு கனவு
குற்றவாளிக் கூண்டில் நான் நிறுத்தப்பட்டிருந்தேன்
எதிர்க் கூண்டில் நீ.......
விசாரணை ஆரம்பித்தது
எனக்கு பேச அவகாசம் வைத்திடவில்லை நீ......
என்றைக்குமே இல்லாத
ஆக்ரோசத்துடன்
உன் பக்க நியாயங்களை
உரைத்துக் கொண்டிருந்தாய்.........

அங்கே
எல்லாம் உனக்கு சாதகமாக........
வெற்றிக் களிப்பில்
வெளியேற முனைகிறாய்.........

நான் உன்னையே பார்த்துக் கொண்டு.......
என்னுள் காதல் தான் பூக்கிறது.......
நீ
என்னை கண்டு கொள்வதாயில்லை......

முடிவில்
தண்டனைக்கு தயாராகி விட்டேன்
என்னைப்பற்றி
அறிந்திருந்தால்
என் கடைசி ஆசை பற்றி
எதுவும் கேட்கப்படவில்லை.......

கண்ணீர் கரிக்க
கனவு கலைகிறது......
தென்றலாய்
வருடிச் செல்கிறாய் நீ.......

## நினைக்கிறேன் – மறக்கலாம் என

சில இரவுகளில்
உன் வருகை இருக்கிறது.......
ஆடலும் பாடலும்
சேர்ந்த நாளொன்றில்
உன் எண்ணங்கள்
எனக்கு புதிதாய் தோன்றிட
காரணம் இருந்தது......

அனேக இரவுகள்
உன்னை தொலைத்தவையாகவே
கழிதலை செய்கிறது
அதுவும்
சில நாட்களாகத் தான்....

நீ தடம் மாறி
தடுமாறும் அளவில்
நம் கதை இருந்திருக்கிறதா......?
உண்மைதான்
உன் விம்பத்தை
நரம்புகள் உணர்ந்த போது
நானும் உன் போல் தான்......

இது வரை
வெளிக்காட்சியாய்
நடந்த உரையாடல்கள்
இப்போது
மனதுக்குள் மட்டும்........
இருக்கவே கூடாது .......புரிகிறதா........?
இது நானே எனக்கு பிறப்பிக்கும்
கட்டளை - முடிவதே இல்லையே
உன்னை நினைக்காமல் இருக்க.........
இன்னொன்று
விரல்களுக்குள் பேனா சிக்கினால்
இப்போதும் முதலில்
கிறுக்குவது - உன் பெயரைத்தான்
சிரிப்பு நரம்புகள் செயற்பட நினைக்கிறதா
உண்மையில் இது
துக்க நரம்புகளுக்கான தருணம்......

## ஏதொ ஒரு நேற்று

எனக்குள்ளிருந்த
ஒரு கவிதை
துள்ளித் துள்ளி எழுகிறது......
நான் எதைச் சொல்ல
எப்போதெல்லாம்
கவிதை பிறக்குமென்று
தெரியவில்லை...........

மழை பெய்து முடித்த பின்னால்
ஈரம் எங்கும் ஒட்டிக் கிடப்பது போல
மனம் எல்லா இடங்களிலும்
ஒட்டிக் கிடக்கிறது...........

எதை எழுதச் சொல்லி
எழுந்தது இந்தக் கட்டாக்காலி கவிதை
நேற்றைய பொழுதின்
ரணம் கலந்த இன்ப நினைவுகளையா...........?

இன்பக் காயங்கள் நிறைந்த
உடல் பை ஒன்று இருந்தது......
அது சில இன்பங்களைத் தந்து
காயங்களைக் காட்டி அழுது கொண்டிருக்கும்.......
ஒரு வேளை அதைப்பற்றி
பாடச் சொல்லும்
ஒரு கவிதையாக இது எழுந்திருக்கலாம்.......

கையால் ஓங்கி தாக்க முற்படும் போது
ஈக்கள் பறந்து விடும்
வேகமா வாழ்க்கைப் போக்கை
கொண்டவை அவை.....

ஒரு வேளை வேகமாக
வாழ்ந்து மடிய வேண்டும் என்றோ
அல்லது
எதற்கும் அகப்படாத சுதந்திரம் வேண்டும்
என்றோ
துள்ளி எழுந்த கவிதை
சொல்ல நினைக்கலாம்.......

நான் என்ன செய்ய
எழுதி முடித்த பின்னால்
கவிதை சொல்கிறது

ஈக்கள் மொய்க்காத
இந்தக் காயங்கள் தேவையில்லை
இவை கேட்பது
இரத்தத்தை அல்ல
கண்ணீரை........
போனாய் போ
நல்ல கவிதை தான் இது
எதைச் சொல்ல எழுந்ததோ
எதையெல்லாம் சொல்லிச் செல்கிறது.......

# கவிதை என்றான என் கிறுக்கல்கள்

## கிறுக்கல் வகை - 04

01. *இஸ்லாமிய தேசங்களில்*

02. *பின் குறிப்பு*

03. *மழை*

04. *உயிர் குடிக்கும் மனிதர்களும், உடல் கிழிக்கும் மிருகங்களும்*

05. *துஷ்பிரயோகம் பற்றிய அநாதை வரிகள்*

06. *மூன்று பூச்சியம் அதற்கு முன்னால் ஒன்று*

07. *மண்ணரித்த மண்டையோடுகள்*

08. *ரிசானா நபீக் – ஒரு படிப்பினை*

09. *போர் பற்றிய அவதானம்*

## இஸ்லாமிய தேசங்களில்.........

புறப்பட வேண்டியிருக்கிறது
உறவினர்களுக்கு சொல்லி அனுப்புங்கள்
வெகுதூரப் பயணமொன்றுக்காய்
புறப்பட வேண்டியிருக்கிறது.........

ஒவ்வொரு பருக்கையாய்
பொறுக்கிக் கொண்டிருக்க
அவகாசமில்லை...........
போடுவதை அதிகப்படுத்து........

வெளிச்சத்தில் மட்டும்
திருப்தி கண்டு கொண்டிருந்த வயதில்
பல இரவுகளில் சொல்லப்பட்ட கதை இது......
காய்ந்து போன
இரத்தம் பற்றி பேசிப்பயனில்லை
சில ஈச்சம் பழ தோட்டக்காரர்களையும்
சில திராட்சைப் பழ தோட்டக் காரர்களையும்
காப்பாற்றியாக வேண்டும்.........
அவர்களோடு சேர்த்து
சில பாலைவனத்து ஒட்டகைகளும்
எனக்காக
காத்திருப்பதாக உணருகிறேன்............

வார்த்தைகளை சுருக்கம் செய்
அதிகம் பேசிட நேரமில்லை......
பல ஆத்மாக்களின் அழுகையொலி
கேட்டுக் கொண்டேயிருப்பதால்.......

சில தோட்டாக்களும் துப்பாக்கிகளும்
பெயர் தெரியாத ஆயுதங்களை
எனக்கு அறிமுகம் செய்ய காத்திருக்கிறது

உறவினர்களுக்கு சொல்லியனுப்புங்கள்
நான் புறப்பட்டு விட்டேனென்று.......

*பின்குறிப்பு –*

நீ ஆடு
இன்னும் சத்தமாக பாடு
குதி
இன்னும் வேகமாக ஓடு
நடிக்கத் தெரிந்தால் அதையும் செய்
உடைக்கப் போகிறாயா
சரிதான் - போட்டு உடை
எறியத்தான் வேண்டும்
என முடிவெடுத்த பின்னால்
யோசனை எதற்கு
எறிந்து விடு
பறக்கத் தோன்றினால் பற
மிதக்கத் தோன்றினால் மித -
என்ன? சிரிக்கப் போகிறாயா
சிரி - இன்னும் சத்தமாக சிரி
அழுகையும் வருகிறதா - அழுது விடு
இனி என்ன
எல்லாம் செய்து விடு
எதற்கும் தடை இல்லை
இனி, - பின்குறிப்பு -
மரணம் நிச்சயம்........

*– மழை –*

கால் தொடும் தரைக்கும்
தொலை தூர வானுக்கும்
நடுவிலே - இடைவெளி இல்லா
இரைச்சலுடனான கம்பிவேலி
சிறைப்பட்டது இலங்கைத் தமிழர்
மட்டு மல்ல
அகப்பட்ட அனைவரும் தான்..........

## – உயிர் குடிக்கும் மனிதர்களும் உடல் கிழிக்கும் மிருகங்களும் –

நீ
சாப்பிட்ட பாத்திரத்தில்
எஞ்சிய பருக்கைகளுக்காய்
கரையும் காக்கைகளை விரட்டி விடாதே.......

எந்தக் காட்டுக்குள்ளாவது
இரை தேடிக் காத்திருக்கும்
கழுகுகளைக் கண்டால் -
மாமிசத் துண்டங்களை பரிசளித்து விடு.....

இரவிலே
ஊளையிட்டதற்காய்
உன் தூக்கம் கலைந்ததென்று
அந்த நாய்களுக்கு கல்லெறியாதே.......

எங்காவது
பிணம் தேடும் பறவைகளை
கண்டு விட்டால்
இறைச்சிக் கடைகளின் விலாசத்தை அளித்து விடு

எனென்றால்
சில வேளை அவைகள்
நாடு கடந்து
லிபியாவையோ
பர்மாவையோ
சிரியாவையோ
பாலஸ்தீனத்தையோ
அடைந்து விடலாம்
அங்கே - நம்
தாய்மார்களதும்
சகோதரர்களதும்
மையத்துக்கள்
புதைக்கப்படும் வரையாவது
அவைகளுக்கு நீ இரக்கம் காட்டு........

## துஷ்பிரயோகம் பற்றிய அநாதை வரிகள் –

உன் விரல்களைப் பிடித்து
தெருவின் ஓரமாய்
பயணித்த போதினில்
நினைத்திருக்க வில்லை நான்
நீ எனைப் பிரிவாய்
நான் தனி மரமாகி விடுவேன் -என
சத்தியமாய்
நினைத்திருக்க வில்லை தான்.......

தாயில்லாப் பிள்ளை என்று
நீ தாயாக மாறிய பின்
பெண்ணுக்கே இல்லாத
பக்குவம் கொண்டிருந்தாய்.......

இங்கே
முரடான கைகள்
எனைப் பிடித்து தள்ளுகையில்
உணருகிறேன் நான்........
தினசரி தண்ணீர் தான் என் ஆகாரம்
நாளொரு உதை தான் என் சம்பளம்
இவை நீ எனக்கு காட்டிடாத பக்கங்கள்....

நான் அமர்த்தப்பட்டேன்
இங்கே வீட்டு வேலைக்காய்.....
என் எதிர்காலம் பற்றி
சிந்திக்கவே முடியாமல்
நீ கண்ட கனவெல்லாம்
சிதைந்து போக.....
நான் மீண்டு எழப்போவதில்லை
என் சோகங்கள் எனக்குள் மட்டும்

அப்பா -
நீ போயிருக்கவே கூடாது
நான் வாழுமட்டும் - இன்றேல்
கொஞ்சம் கஷ்டங்களையாவது எனக்கு காட்டியிருக்கலாம்
மொத்தமாய் எனை உயிரோடு எரிந்து விட்டாய்....
நினைத்திருக்க வில்லை நான் சத்தியமாக..........

## மூன்று பூச்சியம் அதற்கு முன்னால் ஒன்று

கனவுகள்
திணிக்கப்படுவதால்
உறக்கம் பறிபோனது....

சாதாரண கனவுகளா அவை
காது வழி நுழையும் அசுத்தமான கனவுகள்
தவிர்க்க முடியாத பத்திரிகைக் கனவுகள்
பார்க்க விரும்பாத இணையக் கனவுகள்.....

தூக்கத்தைப் பறித்து
துயரத்தை பரிசளிக்கும்
மண்ணாங்கட்டி கனவுகள்..........

எல்லா இடங்களிலும்
அசுத்தத்தால் மலம் பீச்சியபடி
இருப்பதால்
கண்கள் கெட்டுப் போயின......
வடியும் இரத்தம் துடைக்க முடியாதது........

வீண்வாதம் கொண்டு
பிரச்சாரம் செய்வதால்
தன் பக்கம் நியாயம் என
மானங்கெட்ட கனவுகள்
நினைத்திருக்கின்றன போலும்........

துண்டுப் பிரசுரங்களுக்கும்
சுவரொட்டிகளுக்கும் குறைவில்லை
விளம்பரம் தேடும் கனவுகளால்
கண்களுக்குத் தொல்லை.......

கண்களைத் திறந்து கொண்டு
தூங்கலாம் என்றால்
புழுப்போல மெல்ல நெளிந்த
மூளையைத் தின்று
மனதுக்குள் எச்சில்துப்பும்
கனவுகளால்
பெரும் தொல்லை..........

என்ன சொல்லி தேற்றல் செய்ய
நல்லது
பெரும் நெருப்பை உண்டாக்கும்
எரிகொள்ளிகளின் சேர்வை.......

மூன்று பூச்சியம்
அதற்கு முன்னால் ஒன்று
சேர்ந்து தான்
முடிவு செய்யும் ஏதாவதொன்றை........

## மண்ணாித்த மண்டையோடுகள்

“கற்பாறைகளுக்கிடையில்
நசுக்கப்பட்டடு இரத்தம் உறைந்து
கிடக்கும் குழந்தையை
கண்டெடுத்து
கையில் வைத்துக் கொண்டு
கதறியழும் தந்தை”
விபரமான செய்திகளுடன் பத்திரிகையில் புகைப்படம்

வர வர
இந்தப் பத்திரிகையின்
பிணநெடி
மூக்கை அசுத்தப்படுத்தி
கண்களை வாந்தியெடுக்க வைக்கிறது......

எங்கிருந்து வந்து
எப்படிப் போகிறது
எனத் தெரியாத வயதிலேயே
உயிர் பிரிய வேண்டுமென்று
எழுதப்பட்டு விட்டது
என்றால்
யார் எதைச் செய்து தடுத்து விடலாம்.............?

என்றாலும்
எதையாவது புரிந்து கொள்ள முடியாமல்
போனவர்களும்
என்றாவது
மண்ணரித்த மண்டையோடுகள் தானே......

இரத்தம் படிந்த குண்டுகளுக்கு
இதயம் வைத்து படைக்காமல் விட்ட
மனித சமுதாயமே.........
வெறுமையான நெஞ்சுக்கூட்டில்
இடம் பிடித்துக் கொண்டிருக்கும்
அந்த இரத்தக் கட்டியை கழற்றினால்
கறை படியாத இடத்தில் வை.........
எதிர்கால ஆயுதங்கள் உபயோகிக்க முனையலாம்
உனக்காதரவாக செயற்படவாவது..........

## றிசான நபீக் – ஒரு படிப்பினை

புதினச் செய்தி அது
புதினச் செய்தி - எதுவரை
நேற்று வரை அல்லது
அதற்கும் முந்திய - இன்னும்
அதைவிட முந்திய நாளொன்றில்
அது புதினச் செய்தி......

இனி,
நினைவுச் செய்தி - எதுவரை
எப்போதுமாகவும் இருக்கலாம்
அவ்வப்போது நினைவில் இருக்கலாம்
அல்லது
இன்னொரு புதினச் செய்தியின்
வருகைக்குப் பின்
இது பழையதாகிப் போகலாம்........

காத்திருந்தவர்களுக்கு நல்ல செய்தி
குற்றம் கூற காத்திருந்தவர்களுக்கு
இது இளகிய இரும்புதான்.......
கொல்லன்களாகி கண்டபடி
அடிக்கலாம், எறியலாம்
முழு மொத்த தாக்குதலையும் செய்யலாம்.....

ஒவ்வொரு ஒன்று கூடலிலும்
நம்பிக்கையை பறக்க விட்டோம்
அது
அவர்கள் விழாக்களில் பறக்க விடும்
புறாக்கள் போல் ஆகிப் போனது......

எல்லோர் இதயத்திலும்
இரத்தம் கசிகிறது.....
ஏனோ - அங்கே
இதயங்கள் தூங்கிப் போயின.......
தட்டி எழுப்புவதற்குள்
எல்லாம் முடிந்த போனது
உடலுக்கு தலை பாரமானது.......

சமூகக் கடமை ஒன்றை
தவற விட்டதற்காய் எல்லோரும்
பதில் சொல்லத் தயாராவோம் -
இங்கே
உங்கள் கண்ணீரை விட
அதிகம் வேண்டப் படுவது
றிசானாக்களின் பாதுகாப்பே.......
புரட்டுங்கள் - வேதத்தை
உண்மை புரியும்..........

## போர் பற்றிய அவதானம்

அதிகார பூர்வமாக
போர் ஒன்றைத் தொடங்குவோம்........
பிரபல்யமற்றுப் போனவர்களால்
செய்யப்பட்ட முதல் உலகப் போர் போல் அல்ல
இரண்டாம் உலகப் போர் போல்
நல்ல துணிச்சல் மிக்கதொரு போர்.......

சிப்பாய்களை தயார் செய்யச் சொல்லி
தூது விடுங்கள்
புறாக்கள் மூலமாவது
அல்லது
தொலைபேசி மூலமாவது.......

ஒரு தலைமுறை இளைஞர்களை
முழுவதுமாக அழித்து விட முடிவெடுங்கள்
பீரங்கிகளையும் குண்டுகளையும்
முன்னால் கொண்டு போடுங்கள்.........
புல் பூண்டு கூட அங்கே வரக்கூடாது
துப்பாக்கிகளுக்கு உயிரூட்டி உலவ விடுங்கள்......

அவகாசமில்லை - வேலை அதிகம்
சாம்ராஜ்யங்கள் சரிய வேண்டும்
உயிர்கள் பறிபோக வேண்டும்

இவ்வாறு எமக்குள்ள வேலைகள் அதிகம்
அதனால்
அதிகார பூர்வமாக போர் ஒன்றை தொடங்குவோம்.....

முன்னெச்சரிக்கைகளை கைவிட்டு விட்டு
களத்தில்
முன்னேறுவதை கைக்கொள்ளுங்கள்.......
உயிரற்ற உடல்களைத் துளைத்து
குண்டுகளை வீண் செய்ய வேண்டாம்.

உறவுகளையும் உணர்வுகளையும்
தூர வீசிவிட்டு கலந்து கொள்ளுங்கள்
நல்ல துணிச்சல் மிக்கதொரு போருக்காக..!
“எதற்காகப் போர்” என்று கேள்விகள் எழுந்தால்
தேசபக்திக்காக என்று சொல்லி விடுங்கள்
உண்மையை மறைக்க
அது தான் சிறந்த வார்த்தை..........

**மேற்பார்வையும் வழிகாட்டலும்**

*விஜித் கனுகல*
கலாசார அலுவல்கள் பணிப்பாளர்

*கே.டீ. காரியகரவண*
கணக்காளர்

*ஸ்ரீமதீ செனவிரத்ன*
நிர்வாக அதிகாரி

*டட்லி ராஜபக்க்ஷ*
பிரதி உதவியாளர்

**சிறந்த கையெழுத்துப் பிரதிப் போட்டி செயற்திட்ட இணைப்பாளர்**

*எம்.எல்.சுரங்க நயனஜீத்*
அபிவிருத்தி அதிகாரி

**அச்சு ஒருங்கிணைப்பாளர்**

*நிஷ்ஷங்க விமலவீர*
முகாமைத்துவ உதவியாளர்

**அச்சகம்**

தயாவன்ச பிரின்டர்ஸ்,
இல. 446, A மருதானை வீதி,
கொழும்பு 10

கலாசார அலுவல்கள் திணைக்களம்
8வது மாடி, செத்திரிபாய,
பத்தரமுல்ல

ISBN978-955-0353-33-0
9789550353330